யாழ்ப்பாணம்

Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 18 [31-03-1993] புதன்கிழமை ஓசை 41

## க. பொ. த. பரீட்சை முடிவு விரைவில் பெற முயற்சி

கொழும்பில் நேற்று வெளியிடப்பட்ட 1992 டிசம்பரில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (சா/தர) பரீட்சையின் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின் பெறு பேறுகளை கொழும்பிலிருந்து மிகவிரைவில் விமானமூலம் யாழ்ப்பாணம் கொண் டுவர யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது. மேலும் யாழ். கல்வித்திணைக்கள உத்தியோகபூர்வ அலுவல்கள் காரணமாக நேற்று பலாலியில் இருந்து விமான மூலம் கொழும்புசென்ற யாழ்.பிரதேச கல்விப்பணிப்பாளர் முதலில் மேற்படி பெறு பேறுகளை இங்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

# செட்டிகுளத்தில் புலிகள் தாக்குதல்

### 3 படையினர் பலி: ஐவர் காயம் காவலரண்கள் தகர்ப்பு

[வவுனியா]

செட்டிகுளம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று காவலரண்கள் மீதும் ஒரு வீட்டின் மீதும் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் பலியாகினர். ஐவர் காயமடைந்தனர். காவலரண்கள் முற்றாக அழிக்கப் பட்டதுடன் அங்கிருந்து ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப் பற்றப்பட்டன. இத் தாக்குதலின்போது ஒரு விடுதலைப்புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் புதிதாக அமைக்கபபட்ட மூன்று காவலரண்கள் மீதும் அதற்குள் அமைக்கப்பட்டிருந்த வீடு ஒன்றின் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

சுமார் பத்து நிமிடங்கள் வரை நடைபெற்ற உக்கிர மோதலின்போது செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்து விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது அகோர எறிகணைத் தாக்குதல்களை சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்தினர்.

இத்தாக்குதலுக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் மூன்று காவலரண்களையும் அதற்குள் அமைந்திருந்தவீடு ஒன்றையும் முற்றாகத் தாக்கி அழித்தனர். இத் தாக்குதலின்போது சிறிலங்கா இராணுவ தரப்பில் மூவர் கொல்லப்பட்டனர். ஏனையோர் பலத்த இழப்புகளுடன் முகாமுக்குத் தப்பி ஓடி விட்டனர்.

மேற்படி காவலரண்களிலிருந்து ஆயுதங்களையும் இராணுவ தளபாடங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

இத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப் பட்டதாகவும் ஐவர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா கூட்டுப்படை தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(வவுனியா)

செட்டிகுளம் சிறிலங்கா இராணுவ முகாம் காவலரண்கள்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலின்போது அங்கிருந்து புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

o 40 எம்.எம். எறிகணைச் செலுத்தி — 01
o எஸ்.எல்.ஆர். ரவைக் கூடு — 02
o ஏ.கே ஜக்கட் கோல்சர் — 05
o ஏ கே. கோல்சர் — 02
o திசையறி கருவி — 01
o நேற்றோ ரக ரவைகள் — 159
o நடுத்தர ரவைகள் —2030
o ரி 81 துப்பாக்கி எறிகணை — 02

செட்டிகுளத்தில்

### வீரச்சாவு



கப்டன் உருத்திரன்
[பொஸ்கோ]

வவுனியா செட்டிகுளம் சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் உருத்திரன்/பொஸ்கோ (வீஜயரத்தினம் தயாளன், கரவெட்டி தற்போதைய முகவரி -171, ஸ்கந்தபுரம். கிளிநொச்சி)என்பவருக்குத்தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### வீரச்சாவு

கப்டன் ரதீஸ்வரன்
[ரதீஸ்]

30ஆம் திகதி அதிகாலை 2-16 மணியளவில் மட்டக்களப்பில் பாம்பு தீண்டி போராளி ஒருவர் வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

கப்டன் ரதீஸ்வரன் / ரதீஸ் [கோபால பிள்ளை செல்வ

# படை முகாம்களுக்கு தீவிர பாதுகாப்பு

### புலிகள் தாக்கலாமென கூட்டுப்படை தலைமை அச்சம்

[கொழும்பு]

வடக்கில் மாத்திரமன்றிக் கிழக்கிலும் இராணுவ முகாம்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் முயற்சியில் அனுராதபுரத்தில் அமைந்துள்ள கூட்டுப்படை நடவடிக்கைச் செயலகத்தின் பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்ரன் வணசிங்கா கடந்த வாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததாக "சண்டே ரைம்ஸ்" வார இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்து ஹமில்டன் வணசிங்கா ஆலோசனை கலந்ததாகவும், ஆலோசனைகளின்போது ஆராயப்பட்ட விஷயங்கள் குறித்துப் படை வட்டாரங்கள் மௌனம் சாதிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் பாதுகாப்புப் படைகளின் முகாமைத் தாக்கும் முயற்சியில் புலிகள் மேற்கொள்ளக் கூடும் என்று பாதுகாப்புப் படையினர் நம்புவதால் அவசரமாகப் பாதுகாப்பு பலப்படுத்தப் படுவதாக நம்பத்தகுந்த பாதுகாப்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார்த் தீவில் இராணுவ நடவடிக்கை

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினர் மன்னார் தீவில் "கிறாப்கோ" இராணுவ நடவடிக்கை ஒன்றை நேற்று ஆரம்பித்ததாக சிறிலங்கா கூட்டுப்படை தலைமையகம் அறிவித்துள்ளது.

மேற்படி புதிய இராணுவ

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வடக்கில் தாக்குதல் நடத்த இராணுவத்தினர் ஒத்திகை

(கொழும்பு)

வடக்கில் பாரிய இராணுவ

கூறப்படும் இலக்குகள் மீது தாம்விமானத் தாக்குதல்களை

திரும்பிவருகின்றமை போன்ற இராணுவ செயற்பாடுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| o | 40 எம்.எம். எறிகணைச் செலுத்தி | — 01 | o | ரி 81 துப்பாக்கி எறிகணை | — 02 |
| o | ரி 81 ரக துப்பாக்கி | — 01 | o | ஏ.கே.எல்.எம்.ஜி. செயின் | — 210 |
| o | ரி 56 புதிய மொடல் துப்பாக்கி | — 01 | o | மழைக் கவசம் | — 01 |
| o | வேட்டைத் துப்பாக்கி | — 05 | o | தண்ணீர்க் கான் | — 03 |
| o | ரி 81 ரவைக் கூடு | — 04 | o | தண்ணீர்க் கான் கோல்சர் | — 01 |
| o | ரி 56 ரவைக் கூடு | — 15 | o | சப்பாத்து (சோடி) | — 04 |
| o | ஜே.ஆர். ரக கைக்குண்டு | — 02 | | | |

# படையினர் முயற்சி புலிகளால் முறியடிப்பு

## சில்லாலையில் சம்பவம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை சிறிலங்கா இராணுவ காவலரண்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய உக்கிர தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் வலிகாமம் பகுதியிலுள்ள சில்லாலைப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரே தமது காவலரண்களிலிருந்து பெருமளவில் வெளியேறினர்.

சுமார் 50 மீற்றர் வரை முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதலைத் தொடுத்தனர். விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் இராணுவத்தினர் தமது நிலைகளுக்கு பின்வாங்கிச் சென்றனர்.

மேற்படி தாக்குதலின்போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் இதுவரை தெரியவரவில்லை.

## கிளாலி கடற்பரப்பில்

# கடற்படையினரால் படகுகள் பறிப்பு

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று பொருள்களை ஏற்றி வந்துகொண்டிருந்த படகுகள் மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதலை நடாத்தியுள்ளனர் எனவும் இதனையடுத்து மூன்று படகுகளை கடற்படையினர் தமது படகில் கட்டியிழுத்துச் சென்றுள்ளனர் எனவும் ஊர்ஜிதம்அற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

(86)

## கறுக்காய் தீவிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம்

நேற்றுக் காலை 3.00 மணியளவில் அல்லிப்பளை அருகே அமைந்துள்ள கறுக்காய்தீவு, கறுக்காய் தீவு முனைப் பகுதிகளிலிருந்து அல்லிப்பளை துறைமுகப் பகுதியை மையமாக வைத்து துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தப்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. எனினும், கிளாலியிலிருந்து பூநகரிக்குச்சென்றபடகுகளும், பூநகரியிலிருந்து கிளாலிக்கு வந்த படகுகளும் எதுவித பாதிப்புமின்றி நேற்று முன்தினம் இரவு வந்து சேர்ந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

[09] [11]

## நோயாளர் கவனத்திற்கு

(குருநகர்)

வைத்திய நிபுணர்களால் சிகிச்சை பெறக் கொழும்பு செல்ல சிபார்சு செய்யப்பட்டிருக்கும் நோயாளர்களை எதிர்வரும் 6-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு காரியாலயத்தில் சமுகம் அளிக்கும்படி யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

நோயாளர்கள் சிபார்சுக் கடிதம், அடையாள அட்டை என்பவற்றுடன் சமுகம் தரும்படி அவர் மேலும் தெரிவிக்கிறார்.

(21)

ராஜா, கடற்கரை வீதி, திருக்கோவில்-2, அம்பாறை] என்பவரே இவ்வாறு வீரச்சாவு அடைந்தவராவர் ✱



லெப். அரசகுமாரி

29-3-93 அன்று எதிர்பாராத வெடிவிபத்தொன்றில் விடுதலைப் புலிகள் பெண் போராளி ஒருவர் வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

லெப்டினன்ட் அரசகுமாரி [பேதுறு கிறேசி, வன்சியன் குளம், வங்காலை, மன்னார் தற்போதய முகவரி- பண்டிவிரிச்சான் மடு] என்பவரே இவ்வாறு வீரச்சாவு அடைந்தவராவார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வெளிவாரிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1992-ம் ஆண்டு வெளிவாரி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்புகள் பிரிவால் கோரப்பட்டுள்ளன.

கலை முதற் தேர்வு, வர்த்தக முதற்தேர்வு, வர்த்தக மாணிபகுதி I, பொதுக்கலை மாணிபகுதி I, சிறப்புக்கலை

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்காகக் கடந்த சில நாட்களாக அதற்கான ஒத்திகை நடைபெற்றுவருவதாக கூட்டுப்படைகளின் தலைமைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

இதன் அடிப்படையிலேயே கடந்த சில நாட்களாகப் போராளிகள் இருப்பதாகக் நடாத்திவருவதாகவும் செட்டிகுளம் ஆனையிறவு, மாதகல், வெற்றிலைக்கேணி பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தமது நிலைகளை விட்டு வெளியேறிச் சிலயார் தூரம் சென்றபின் மீண்டும் தமது பழைய நிலைகளுக்குத் அமைந்துள்ளதாகக் கூட்டுப் படைகளின் தலைமைப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

## இராணுவவாகனங்களின்

# உதிரிப்பாகங்களை விற்ற மோசடிகள் அம்பலம்

## இராணுவ, திணைக்கள அதிகாரிகள் மீது விசாரணை

(கொழும்பு)

அடிக்கடி இராணுவ வாகனங்களைத் திருத்துவதற்கென எடுத்துச்சென்று உதிரிப்பாகங்கள் மற்றும் பெறுமதியான பொருள்களை திருடி விற்று பெரும் பணம் சம்பாதித்த இராணுவத்தினர் பற்றிய விபரம் ஒன்று கொழும்பு குற்றப் புலனாய்வுப் பொலீஸாருக்கு கிடைத்துள்ளது.

லஞ்ச ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த நெலும் கமகே இது பற்றி மேலும் கூறுகையில், இராணுவ வாகனங்களை திருத்துவதற்காக எடுத்துச் செல்வதாகக்கூறி தனியார் கம்பனி ஒன்றில் உதிரிப்பாகங்களை கமிஷனுக்கு விற்பனை செய்த சிலரின் விபரங்கள் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

இக் குறிப்பிட்ட வாகனக் கம்பனியிடமிருந்து கமிஷன் பெற்றுக்கொண்ட இராணுவத்தினர் பற்றித் தெரியவந்துள்ளதையடுத்து இதுபற்றி விசாரணை நடத்துமாறு இராணுவத்தளபதி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இராணுவ ஒழுங்காற்று விதிகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட இராணு

[ 4 ஆம் பக்கம் பார்க்க ]

## கிளாலி படுகொலையை கண்டித்து

# யாழ். பல்கலை மாணவர் இன்று ஆர்ப்பாட்டப்பேரணி

[யாழ்ப்பாணம்]

கிளாலி கடற்பரப்பில் அப்பாவி பொதுமக்களும், மாணவர்களும் அநியாயமாக படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்த யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இவ்வூர்வலம் இன்றுகாலை 9.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலிலிருந்து ஆரம்பித்து கோவில் வீதியூடாக சென்று யாழ். அரச அதிபர் செயலகத்தில் முடிவடையும். இவ் ஊர்வலத்தின் போது மாணவர் ஒன்றியத்தின் சார்பில், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அரச அதிபர் ஆகியோருக்கு மகஜர்கள் சமர்ப்பிக்கப்படும்.

கிளாலியில் அப்பாவிப் பொதுமக்களும், மாணவர்களும் அநியாயமாக படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் யாழ் குடாநாட்டு மக்களுக்கு பாதுகாப்பான பாதையை ஏற்படுத்தித் தரக் கோரியும் இவ் ஊர்வலம் நடாத்தப்படுகிறது.

# வரி விளம்பரம்

## சத்தியா நகைத் தொழிலகம்

சகல விதமான நகைத் திருத்த வேலைகளும் மற்றும் வெள்ளி, செப்பு, பித்தளை போன்ற ஆபரணங்களுக்கும் (கிளிற்) தங்கம் பூசி உடனுக்கு உடன் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம், 176/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6261)

## தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகல றேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள் மற்றும் மின்சார உபகரணங்கள், எலக்ரோனிக் ஓட்டோ மற்றிக் கடிகாரங்கள் மேசை, சுவர் மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேச்ஸ்3, கண்டி வீதி (இலங்கை வங்கி அருகாமையில்), சாவகச்சேரி.

(சி-6126)

## உதைபந்தாட்ட போட்டி

புத்தூர் எவ்றெஸ்ற் விளையாட்டுக்கழக மறைந்த விளையாட்டு வீரர்கள் நினைவாக இன்று பிற்பகல்4-00 மணிக்கு எவறெஸ்ற் வி. சழகமை தானத்தில் வீனஸ்–எதிர் கலைமதி இடம் பெறும். அத்துடன்கழக வளர்ச்சிக்கான அதிர்ஷ்டலாபச்சீட்டும் அதிரஷ்டம் பார்க்கப் படும். -நிர்வாகிகள். (4596)

## வல்லிபுரக் கோயிலில் இராமநவமி

(பருத்தித்துறை)

சரித்திரப்பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் ஆலயத்தில் சிறிஇராம நவமி விழா நாளை நடைபெறுகின்றது.

யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் அ. சண்முகதாஸ் திருமதி மனோன் மணி சண்முகதாஸ் ஆகியோரின் சிறப்புரைகளும் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் பட்டி மன்றமும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. (25)

## சங்கம் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் புனரமைப்புச் செய்யப்பட்டுச் செயற்படத் தொடங்கியுள்ளது. இச்சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்கள் எதிர்வரும் 5-ம் திகதிக்கு முன்னர் தங்கள் அங்கத்துவத்தினைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கிளைக்குழு உறுப்பினர் தெரிவு சம்பந்தமாக ஒவ்வொரு கிளைக் குழுக்களின் நிர்வாக உறுப்பினர்கள் 4-4-1993 மாலை 3.00 மணிக்கு வடமராட்சி கால் நடை வைத்தியசாலை அலுவலகத்திற்குத் தவறாது சமுகமளிக்குமாறு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. மு. கனகசபாபதி அறிவித்துள்ளார். (25)

## கடற்பகுதியில் கரும்புகை

பருத்தித்துறை கடற்பகுதியில் கரும்புகை மண்டலம் ஒன்று திடீரென ஏற்பட்டு தொடர்ந்தும் புகைந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## டாக்டர் ரி. ஞானானந்தன் புலமைப்பரிசு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து இலங்கையில் பல்கலைக்கழகமொன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டு, தொடர்ந்து பயின்று கொண்டிருக்கும் பொருளாதார வசதி குறைந்த மாணவர் ஒருவருக்கு மேற்படி புலமைப்பரிசு வழங்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்படும மாணவருக்கு மாதம் ரூபா 150/- வீதம் இப் புலமைப் பரிசு வழங்கப்படும். தகுதி உள்ள 1990 ஆம் ஆண்டு (உ.த) மாணவர்கள் தகுந்த ஆவணங்களுடன் 15-04-1993 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்
யாழ். இந்துக் கல்லூரி.

(சி- 6298)

---

சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)

---

# O/L- DAY CLASS

## பகல் நேர வகுப்பு

[92 Dec. இல் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான வகுப்பு]

1973 - 1993

**ஏப்ரல் 10-ல் ஆரம்பம்**

முன்கூட்டியே பெயர்களை பதிந்து உங்கள் இடத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்

கடந்த காலங்களில் O/L பரீட்சையில் தவறிய அதிக எண்ணிக்கையான மெல்லக் கற்கும் மாணவர்களை பகல்நேர வகுப்பின் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பயனடையச் செய்த கல்வி நிறுவனம்.

ESTD:- 1973 REGD:- No J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY

(சி/6299)

---

# கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம்

1993ஆம் ஆண்டு முறைசாராக் கல்விப் பிரிவுகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான

## விண்ணப்பம் கோரல்

கீழே காட்டப்பட்ட அட்டவணையின் பிரகாரம் தொழிற்பயிற்சிகள் அளிக்கப் படவுள்ளன. பயிற்சி பெற விரும்பும் பாடசாலையை விட்டு விலகிய, வன் செயலால் பாதிக்கப்பட்ட, வேலைவாய்ப்பற்ற, சுயவேலை வாய்ப்பைத் தேட விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் எப்பயிற்சிக்கும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் அவ்வப் பாடசாலை அதிபரிடம் விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் பெற்று, 15-4-93 க்குள் பணிப்பாளர் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பதாரிகள் - தனது முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, பயிற்சி பெறவிரும்பும் பாடநெறி, கல்வித்தகைமை, கற்ற பாடசாலை ஆகியவற்றை உள்ளடக்கியதாக விண்ணப்பம் அமைய வேண்டும். ஏதாவது ஒரு பாடநெறியை மட்டுமே கற்க அனுமதிக்கப்படும். பயிற்சிகள் 1993 டிசம்பர் மாதம் முடிவுறும்.

### தகைமைகள்

1. ஆங்கிலச்சுருக்கெழுத்து தட்டச்சு. (336மணி) 8மாதம், ஆங்கிலம் 'சி' தரம் உட்பட க. பொ. த. (சா.த) 6 பாடங்களில் சித்தி
2. தமிழ் சுருக்கெழுத்து தட்டெழுத்து (336மணி) 8மாதம் தமிழில் 'சி' தரத்துடன் க. பொ. த (சா.த) 6 பாடங்களில் சித்தி
3. படவரைஞர் பயிற்சி (ஆங்கில மொழி மூலம்) 336மணி, 8மாதம் கணிதம், ஆங்கிலம், 'சி' தரத்துடன் க. பொ. த. (சா.த) 6பாடங்களில் சித்தி
4. வானொலி, தொலைக்காட்சி திருத்துதல்: விஞ்ஞானத்தில் 'சி' தரத்துடன் க. பொ. த. (சா.த) 6பாடங்களில் சித்தி.
5. ஏனைய பயிற்சி நெறிகள் 8ஆம் தரம் சித்தியடைந்திருத்தல்.
6. தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சிக்கு க. பொ. த. சித்தியடைந்திருத்தல்.

| பயிற்சி நடைபெறவுள்ள பாடசாலைகள் | பயிற்சி நெறி |
|---|---|
| 01. வைத்தீஸ்வராக் கல்லூரி | மோட்டார் ரீ வைண்டிங் |
| 02. ,, ,, | விளம்பர சேவையும் விற்பனையும் |

---

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க

கிராமிய வங்கியின் பரிசூதியத் திட்டமும் பாடசாலை மாணவர்களுக்கான

## பரிசுத் திட்டமும்

எமது வாடிக்கையாளர்களே, அங்கத்தவர்களே, ஆதரவாளர்களே, மாணவர்களே அனைவரும் மேற்படி இத் திட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்.

1. பரிசூதியத் திட்டத்தில் 40 மாதங்களில் அனைவருக்கும் ரொக்கப்பரிசுகள் உண்டு. மாதாந்தம் தவணைப் பணமாக ரூ 200/- செலுத்தி இப்பரிசினைப் பெற்றதும் தவணைப்பணம் செலுத்தவேண்டியதில்லை.
2. மாணவர் பரிசுத்திட்டத்தில் மாதாந்தம் ரூ 25/- வீதம் சேமப்பணத்தைச் செலுத்தி ரூ. 100/- ரொக்கப்பரிசினைப் பெறுவதுடன் சேமத்திற்கு 12 வீத வட்டியினையும் பெற்றுக்கொள்ளலாம்.
3. மேற்படி திட்டத்திற்கான பரிசில்கள் ஒவ்வொரு மாதமும் சீட்டிழுப்பின் மூலமே வழங்கப்படும்.
4. மேலதிக விபரங்களுக்கு ஊர்காவற்றுறை ப.நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் (பி. எஸ். சேவிஸ் நிலையம், யாழ்.) தொடர்பு கொள்ளவும்.
5. இணைந்து கொள்வதற்கான இறுதித் திகதி 30-4-93 ஆகும்.

கிராமிய வங்கி
முகாமையாளர்.

பொது முகாமையாளர். (சி-6301)

---

# 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 19 — 01 — 1919



விண்ணில் 15 — 02 — 1993

முன்னாள் வரணி கிராம சபை உறுப்பினரும், கூட்டுறவாளருமான

அமரர்

## சடையர் சரவணமுத்து

15 02-1993 அன்னாரது ஈமக்கிரியைகளில் சகல படிகளிலும் கலந்து கொண்ட, அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், 31-03-1993 இன்று நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், நினைவஞ்சலிகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-6294)

எமது சங்க லொறிக்கு பின்வரும் பொருட்கள் அவசியம் தேவைப்படுகின்றன. விற்பனைக்காக இவற்றை வைத்திருப்போர் தயவு செய்து 5-4-93 க்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். புதியனவும், நல்ல நிலையில் உள்ள பாவித்தமையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. களனி ரயர், ரியூப், மவ்ளர்.
   - அளவு 900 தர 20
   - அளவு 825 தர 20
   - அளவு 700 தர 15
2. பற்றறி 6 வோல்ற் / 155 அம்பியர்.

தலைவர்.

(சி- 6300)

---

94ற்கான G.A.Q, 1st in Com.

**யாழ். பல்கலைகழகம்** (வெளிவாரி)

மேற்கூறப்பட்ட பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் யாழ். பல்கலைக் கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
இதற்கான விரிவுரைகள்
ஆரம்பம்: 10-04-93 (சனி காலை 8 மணி)

**B. A. Part 1, B.Com. Part 1**
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

G.A.Q 94
**பேராதனை**
**பல்கலைக்கழகம்**

இதற்கான பல்கலைக்கழகப் பதிவை
15 - 04 - 1993 ற்கு முன்னர்
எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களையும், விபரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

எஸ். அருள்நங்கை
நிர்வாகி

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி-6304)

---

| | |
|---|---|
| 02. ,, ,, | விளம்பர சேவையும் விற்பனையும் |
| 03. வண்ணை நாவலர் ம. வி. | கட்புலசாதனம் உற்பத்தி செய்தல். |
| 04. வேம்படி மகளிர் கல்லூரி | ஆங்கில தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும். |
| 05. ,, ,, ,, | ஹொட்டல் பயிற்சி நெறி |
| 06. கொட்டடி நமசிவாய வித்தியாலயம் | படவரைஞர் பயிற்சி |
| 07. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | வானொலி தொலைக்காட்சி திருத்துதல் |
| 08. ,, ,, | தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி |
| 09. கனகரத்தினம் ம. ம. வி. | தொழிலகத் தையலும் உடையமைத்தலும் |
| 10. ,, ,, | மோட்டார் கார் திருத்துதல் |
| 11. நல்லூர் ஸ்தான சி. சி. த க. பா | புத்தகம் கட்டுதலும் காகிதப்பொருளுற்பத்தி |
| 12. கொக்குவில் இந்துக்கல்லூரி | தமிழ் தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் |
| 13. டிறிபேக் கல்லூரி | ஆங்கில ,, ,, |
| 14. மெதடிஸ்த பெண்கள் பாடசாலை | தமிழ் ,, ,, |
| 15. ,, ,, ,, | தொழிலகத்தையலும் உடையமைத்தலும் |
| 16. தேவரையாளி இந்துக்கல்லூரி | மோட்டார் கார் திருத்துதல் |
| 17. ,, ,, | கட்புலசாதனம் உற்பத்தி செய்தல் |
| 18 அச்சுவேலி புனித திரேசா வித்தி. | தொழிலகத் தையலும் உடையமைத்தலும் |
| 19 கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | வானொலி திருத்துதல் |
| 20. மல்லாகம் ம. வி | ஆங்கில தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் |
| 21. இராமநாதன் கல்லூரி | விவசாயவிஞ்ஞானமும்விலங்குவேளாண்மையும் |
| 22. ,, ,, | ஹொட்டல் பயிற்சி நெறி. |
| 23. மானிப்பாய் இந்துக்கல்லூரி | ஆங்கில தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் |
| 24. ,, ,, | மோட்டார் ரீ வைண்டிங் |
| 25. விக்ரோரியாக் கல்லூரி | ஆங்கில தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் |
| 26. வட்டு. இந்துக்கல்லூரி | தொழிலகத்தையலும் உடையமைத்தலும் |

வார இறுதி ஆங்கிலக்கல்வி வகுப்பு

01. டிறிபேக்கல்லூரி
02. கொக்குவில் இந்துக்கல்லூரி
03. நாவலர் ம. வி.
04. இணுவில் சைவப்பிரகாச ம. வி.
05. அச்சுவேலி. ம. வி.
06. புத்தூர் சிறி சோமாஸ்கந்த கல்லூரி
07. கந்தரோடை தமிழ் கந்தையா
08. மல்லாகம் ம. வி.
09. வேலாயுதம் ம. வி.
10. உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
11. கொடிகாமம் திருநாவுக்கரசு

வார இறுதி ஆங்கிலப் பயிற்சி பெறுபவர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் பொதுப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

ஒப்பம்:
இ. சுந்தரலிங்கம்
கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

(சி-6297)

---

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-6294)

---

# நினைவு கூருகின்றோம்...

# 1993-03-31

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு- வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**விமல்ராஜ்** (பொன்னுத்துரை இராஜேந்திரன்- கொம்மாதுறை - மட்டு. )

**ஸ்ரார்** (வாரித்தம்பி பொன்னம்பலம் - கல்வயல்- சாவகச்சேரி - யாழ். )

1987ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் எதிர்பாராத விதமாக எமது பொறி வெடியில் சிக்கியதில் எமைப் பிரிந்த-

**குட்டி/மனோராஜ்** (இராசையா இராசரட்ணம்- கம்பர்மலை - வல்வெட்டித்துறை)

**ரதன்** (காங்கேஸ் திலகேஸ்வரன் - சாமியன் அரசடி முடக்காடு - கரவெட்டி மேற்கு - யாழ். )

1989ஆம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட வந்தாறுமூலை வாசியான தமிழ்ப் பொதுமகன்.

கோப்பாயில் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட கட்டப்பிராய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்.

1991ஆம் ஆண்டு வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது விழுப்புண் அடைந்து சிகிச்சையின் போது யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய-

**ஜெகன்** (சிவப்பெருமாள் புஸ்பராசா- புளியங்குளம், ஓமந்தை - வவுனியா)

**மாதவன்** (விஜயராசா குணராசா - பூவரசங்குளம்- வவுனியா)

1992ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த-

**சண்முகதாஸ்** (வடிவேல் செந்தில்நாதன்- இலுப்பையடிச்சேனை - மட்டு. )

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி-6295)

சிந்தனைக்கு

அவமானம் அறியாத இடத்தில், மானம் இராது
—ஆபிரிக்க பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 31-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## தோற்பவர்கள் பழியை ஏற்கத்தான் வேண்டும்

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாமல் போனதற்கும், இராணுவத் தோல்விகளுக்கும் புதிய விளக்கம் ஒன்றைக் கொடுப்பதில் சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள் தற்பொழுது ஈடுபட்டுள்ளன. ''பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இதுவரை பதவி வகித்த ஜெனரல் சிறில் ரணதுங்காவே புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தடையாக இருந்தார்'' என்பதே அப்பத்திரிகைகளின் புதிய கண்டு பிடிப்பாகும்.

பொதுவாக தீர்க்க முடியாத விடயங்கள், வெற்றிகொள்ள முடியாத காரியங்கள் இவற்றிற்குப் பொறுப்பாக இருப்பவர்கள் பதவி விலகும்போது அல்லது ஓய்வு பெறும்போது இவ்வாறான குற்றச்சாட்டுக்களும், சிலவேளை இவற்றிற்கும் மேலாக பிரச்சினை யாவற்றிற்கும் இவர்களே காரணம் என்ற குற்றச்சாட்டையும் ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதும் உண்டு.

ஆனால், ஜெனரல்சிறில் ரணதுங்கா மீதான குற்றச்சாட்டுக்கள் தர்க்கரீதியில் நியாயமற்றவையாகும். வடக்கு, கிழக்கில் இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்பத்தில் இருந்தே பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜெனரல் சிறில் ரணதுங்காவே இருந்து வருகின்றார். இந்நிலையில் வடக்கு, கிழக்கில் கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக இராணுவம் மேற்கொண்டு வரும் பாரிய இராணுவ நடவடிக்கைகள் யாவற்றிற்கும் ஒரு வகையில் சிறில் ரணதுங்கா பொறுப்பாக இருந்திருப்பதோடு, அனுமதியும் வழங்கியுள்ளார்.

இதேபோன்றதொரு குற்றச்சாட்டு கடந்த வருடத்தின் ஆரம்பத்திலும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளினால் முன்வைக்கப்பட்டன. கடந்த வருடம் மார்ச் மாதத்தில், கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்தின் அதிகாரங்கள் முப்படைத் தளபதிகளிடம் பகிர்ந்தளிக்கப்பட்டபோதே இக்குற்றச்சாட்டு எழுந்தன. அக்குற்றச்சாட்டில் அதுவரை கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்திற்குப் பொறுப்பாக இருந்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவினதும், பாதுகாப்புச் செயலாளரான ஜெனரல் சிறில் ரணதுங்

# மண்ணெண்ணெய் மோசடியில் முஸ்லிம் வர்த்தகர் தொடர்பு

(வவுனியா)

வவுனியாவில் சமீபத்தில் இடம்பெற்ற கூட்டுறவுச்சங்கங்களுக்குரிய மண்ணெண்ணெய் மோசடியில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளார் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடு அற்ற பகுதிகளில் மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவது குறிப்பிடத்தக்கது.

இப் பகுதிகளுக்கென வந்த மண்ணெண்ணெயையே மோசடி செய்துள்ளனர்.

வன்னிப்பகுதியில்இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்தமிழ்மக்கள் மண்ணெண்ணெய் இல்லாமல் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர்.

(தி)

## ஐ. தே. க. வேட்பாளரை தெரிவு செய்யக் குழு

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் தெரிவில் ஒன்பது பேர் கொண்ட வேட்பாளர் நியமனச் சபையின் முடிவே இறுதியானது என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியுள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசாவத் தலைவராகக் கொண்ட இந்தச் சபையில் பிரதம மந்திரி டி.பி. விஜயதுங்கா (பிரதித் தலைவர்), டாக்டர் எம். சி. எம் கலீல் (ஐ.தே க.தலைவர்), அமைச்சர் பி. சிறிசேன குரே (பொதுச் செயலாளர்), கொழும்பு மாநகரசபை பிரதி நகரபிதா கே. கணேசலிங்கம் (பொருளாளர்), அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா (உதவிச் செயலாளர்), அமைச்சர்கள் ஏ. சி. எஸ் ஹமீட், பெஸ்ரஸ் பெரேரா மற்றும் கே. எஸ். சொக்ஸி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

1989 இல் வேட்பாளரைத் தேடிக் கட்சி போக வேண்டியிருந்தது. இன்று பலர் வேட்பாளராக நிற்க முன்வந்துள்ளார்கள் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

## மாகாணசபை தேர்தல் ஆரம்ப ஏற்பாடுகள் பூர்த்தி

[கொழும்பு]

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் கடமைகளில் ஒரு இலட்சத்து பன்னிரண்டு அரசாங்க ஊழியர்கள் சேவையாற்றவுள்ளனர் என்றும், எட்டாயிரத்து இருநூறு வாக்களிப்பு நிலையங்களில் வாக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு இருப்பதாகவும், தேர்தல் ஆணையாளர் அலுவலகம் கூறியுள்ளது.

இதேவேளை எதிர்வரும் மகாண சபைத் தேர்தல்களின் போது தனித்துப் போட்டியிடுவது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. இம் முடிவு கடந்த சனியன்று நடந்த அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாக கட்சித் தலைவர் அஷ்ரப் கூறியுள்ளார்.

## வேலைவாய்ப்பு மோசடி பிக்கு உட்பட 3பேர் கைது

(கொழும்பு)

ஜப்பானில் வேலைபெற்றுதருவதாக [illegible] ஏமாற்றி சுமார் 76 லட்சம் ரூபா மோசடி செய்த பிக்கு ஒருவர் உட்பட மூவர் பொலீசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தகர், இருபிக்குகள், பாடகி ஒருவர் ஆகியோரே இந்த மோசடியில் இணைந்து செயற்பட்டதாக கூறப்படுகின்றது. பாடகி தற்போது [illegible] வருகிறார். பிக்குகளில் ஒருவர் தலைமறைவாகிவிட்டார்.

இதேசமயம் சீதுவையில் குருடர் ஒருவர் உட்பட இருவர் 22 இளைஞர்களை ஏமாற்றி 47லட்சம் ரூபா மோசடி செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பளை வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு

(தென்மராட்சி)

பளை அரசினர் வைத்தியசாலையில் முக்கியமான மருந்து வகைகள் இல்லாமையால் மக்கள் சிரமமடைகின்றனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மூளை மலேரியா நோய்கள் பரவி வருவது தெரிந்ததே. இதற்காக வழங்கப்படும் [illegible] நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்நிலையில்தான் செம்பியன்பற்று வைத்தியசாலையும் மிருசுவில் முதலைக்குளம் வைத்தியசாலையும் இயங்கிவருவதாக கூறப்படுகின்றது. (86)

மண்ணெண்ணெய் [illegible]

## சேவைநலம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த 30 வருட காலமாக லொறிச்சாரதியாக கடமையாற்றி சேவைக்காலம் முடிவுற்றுச் செல்லும் திரு. வே. நடராசா அவர்களின் சேவையைப் பாராட்டி நடைபெறும் சேவைநலம் பாராட்டு விழாவும் கௌரவிப்பும் இன்று நண்பகல் திரு. ப. தயானந்தன் தலைமையில்நடைபெறும். [22

## றெட்பானா உதவியில் இலவச பயிற்சி

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்தில் உள்ள 100 பாலர்பாடசாலை ஆசிரியைகளுக்கு 'றெட்பானா' நிறுவனம் இலவச பயிற்சி அளிக்கத் தீர்மானித்துள்ளது

தெரிவு செய்யப்பட்ட பாலர்பாடசாலை ஆசிரியர்களே இப்பயிற்சியில் அனுமதிக்கப்படுவர் என்றும் இதனைவிட யாழ் [illegible] சமூக நிலையங்களின் சம்மேளனத்தின் அனுசரணையுடன் ஐந்து பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கும் பயிற்சி அளிக்க ''றெட்பானா'' முடிவு செய்துள்ளது. [24]

## வீரவணக்க கூட்டம்

3ஆம் [மார்ச்] மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தீவகக் கோட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் நாவற்குழி லவனிதா குடியிருப்பு மைதானத்தில் இன்றுஇரவு 7.30மணிக்கு நடைபெறும்.

தீவக அரசியல் துறை பொறுப்பாளர் திரு. செம்மணன் அவர்கள் தலைமையில்

## “வாழ்கின்றாய் எம் நாவில்”

மட்டுமா நகரினில் நீ பிறந்தாய் – ஈழ
மக்களின் நினைவோடு உயிர்வாழ்ந்தாய்!
மண்ணிலே மீறிய துயர்தானோ – உனை
மாமாங்க வீதிக்கு அழைத்ததுவோ?

மாற்றான் மூச்சுக்கு அடிபணிதல் – ஈழ
மண்ணின் பெருமைக்கு பழுதென்றாய்!
கூற்றனும் வந்து தலைகுனிய – இரு
கொள்கையை வைத்து நீ பசித்திருந்தாய்!

தேன்பாய்ந்து மீன்பாடும் வளநாட்டில் – உனை
தேடியோ வந்தது பசியின்பம்!
ஊண்தேடி வந்தவர் உன்னுயிரை – நல்ல
மானென்று நினைத்திங்கு அழித்தனரோ!

ஆறைந்து நாட்கள் உண்ணாது – இங்கேயும்
அகிம்சையை நாட்டினாய் விறலாக!
ஆண்டைந்து ஆனது உன்தியாகம் – ஆயினும்
அன்றுபோல் வாழ்கின்றாய் எம்நாவில்!

–வேலணையூர் சுரேஷ்.

## தந்தை செல்வாவின் 95 ஆவது பிறந்ததினம்

தந்தை செல்வநாயகத்தின் 95–வது பிறந்த தினம் இன்றாகும். இதனையொட்டி அவர் ஆற்றிய உரைகளிலிருந்து ஒரு சிலவற்றை இங்கு தருகின்றோம்.

''தமிழ்பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாம் ஒருகாலத்தில் கூட்டாட்சி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால் கூட்டரசு மூலம் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியப்படாது என்பதை கடந்த கால அனுபவங்களின் மூலம் இப்போது நாம் அறிந்து கொண்டோம்''

இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியேபிரிந்துவாழ வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்து விட்டோம். இதைநாம் [illegible] தமது உரிமைகளை ஒருபோதும் மீட்டுக்கொள்ள முடியாது. எம் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர். அவர்கள் தமக்கென தனியாட்சி வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எமக்கென ஓர் இடம் இருக்கின்றது. எங்கள் இயக்கம் நாட்டை பிரிக்கும்படி கோரவில்லை. இழந்த உரிமையான அரசை மீள அமைக்க வேண்டும் என்பதே எங்கள் நிலையாகும்.

தனித்தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகின்றது. தனிஈழம் நிறுவுவதும் சுலபமான காரியமல்ல என்பதும் மிகவும் கடினமானதென்பதும் எமக்கு தெரியும். எமக்குள்ள நிலை இரண்டு. நாம் ஒன்றில் சிங்களவர்களின் அதிகாரத்திற்குள்ளிலிருந்து விடுபட்டு வெளியேறவேண்டும். அல்லது அழிந்து போகவேண்டும். எனவே நாங்கள் போராடித் தனித்தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம். நாங்கள் கூட்டாட்சிக் கோரிக்கையை அடியோடு கைவிட்டு விட்டோம்.

கைத் தலைமையகத்திற்குப் பொறுப்பாக இருந்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவினதும், பாதுகாப்புச் செயலாளரான ஜெனரல் சிறில் ரணதுங்காவினதும் திறமைக் குறைவே வெற்றி பெறாமைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், பின்னர் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் இருந்து அதிகாரங்கள் முப்படைத் தளபதிகளுக்கு மாற்றப்பட்டன. ஆனாலும் இராணுவ வெற்றி என்பது எட்ட முடியாத ஒன்றாகவே இருந்தது. மாறாக லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்ணா உட்பட உயர்தளபதிகளையும், பெருமளவினதான இராணுவத் தளபாடங்களை இழக்கவோ அன்றி பறிகொடுக்க வேண்டிய நிலையே ஏற்பட்டு இருந்தது. இது சிறில் ரணதுங்காவால் ஏற்படவில்லை. புலிகளின் தாக்குதலினால் விளைந்தது. இதன் தாக்கம் மீண்டும் அதிகாரத்தை ஜனாதிபதி பிரேமதாசா கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திடம் மாற்றம் செய்யும் அளவிற்கு வந்தது.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் மீண்டும் அதிகாரங்களைப் பெற்றபோது இராணுவம் தோல்வியில் சிக்கி, போரிடும் மனோதிடம் இழந்து காணப்பட்டது. இதனால் புதிய யுத்தகளங்களை இராணுவத்தால் திறக்கமுடியவில்லை. அரசு இராணுவத்திற்கென புதிய ஆளணிகளையும், போர்த்தளபாடங்களையும் சேர்க்க வேண்டியிருந்தது. படையினருக்கு மேலதிக பயிற்சியும் மனோதிடத்தையும் உருவாக்க வேண்டியிருந்தது. இராணுவ புனரமைப்பு அவசியமாகியது. இந்நிலையானது யுத்தகளத்தை மந்தமாக்கியது.

இதற்கு அரசசார்பு பத்திரிகைகள் குறிப்பிடுவது போன்று பாதுகாப்பு செயலாளர்களோ அன்றி சிங்கள இராணுவ அரசியல் தலைமை எதுவுமோ காரணம் அல்ல. சிங்கள இராணுவ தலைமையாயினும் சரி, அரசியல், மதத் தலைமையாயினும் சரி இராணுவ ரீதியாகத்தமிழர்களைத்தோற்கடிக்கவே விரும்புகின்றன; முயற்சிக்கின்றன. ஆனால், அவர்களால் விரும்பியது போன்று தோற்கடிக்கமுடியாமல் உள்ளது. இதைவிடுத்து சிறில் ரணதுங்கா புலிகளைப் பாதுகாக்க முற்படுகின்றார் எனக்கூற முற்படுவது சிறில் ரணதுங்கா மீதான அரசியல் பழிவாங்கலாக இருக்கலாம். ஆனால், இது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. இது ஆட்சியில் இருப்பவர்களுக்குத் தெரியாததல்ல. ஆனால் எது எவ்வாறானாலும் புலிகளிடம் ஜெனரல் சிறில் ரணதுங்கா தோல்வியை ஏற்கத்தான் வேண்டும்.

தில் மூளை மலேரியா நோய்கள் பரவி வருவது தெரிந்ததே. இதற்காக வழங்கப்படும் குளிசைகளான குளோறக்குயின், பிறிமாக்குயின் இரண்டிலும் குளோறக்குயின் மட்டுமே பளை அரசினர் வைத்தியசாலையில் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் மூளை மலேரியா நோய் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதிகமாக ஏனைய நோய்களுக்கும் மருந்துகள் இல்லாமையினால்நோயாளர்கள் வெளியில்தான் மருந்துகளை வாங்க வேண்டிய

கின்றது. (86)

## மண்ணெண்ணெய் விநியோகம்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க பாவனையாளர்களின் ''இ'', 'அ'', ''உ'' உலர் உணவு அட்டைகளுக்கு 1 லீற்றர் மண்ணெண்ணெய் ரூ. 15/- விநியோகிக்கப்படுகின்றது. உலர்உணவு அட்டையுடன் வந்து மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ளவும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவக அரசியல் துறை பொறுப்பாளர் திரு. செம்மணன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ் வீரவணக்கக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்கள் உரை நிகழ்த்தவுள்ளனர். அத்துடன் தீவக கலைபண்பாட்டுக் கழக குழுவினரின் ''மாவீரர் புகழ் பாடுவோம்'' என்ற வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், ''மாவீரர் பதின்மர்'' என்ற தலைப்பில் லவனிதா குடியிருப்பு சிறுவர்களின் கதாப்பிரசங்கம் என்பனவும் கலை நிகழ்ச்சிகளாக இடம் பெறும். [90]

வோம். நாங்கள் கூட்டாட்சிக் கோரிக்கையை அடியோடு கைவிட்டு விட்டோம்.

— 9-11-76இல் சிறிலங்கா பாராளுமன்றத்தில் நிகழ்த்திய கடைசி உரை

''எமது தலைமுறையில் கைகூடாவிடினும் நாம் இப்போரை நடத்தி எமக்கு பின்வரும் சந்ததியினர் கையிற்கொடுப்பது எமது கடன். எம் பின்னே அரும்பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். குறைந்த பட்சம் அவர்களுக்கு அணி வகுப்பவர்களாகவாவது நாம் இருப்போமாக.

— 14-4-50 இல் தமிழரசு கட்சியின் முதல் மாநாட்டு தலைமையுரையில்.

## சந்தை விலைவிபரம் (29-03-1993)

### சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 38.75 | 36.50 | 37.50 | 36.30 | 35.75 | 36.50 | 36.00 | 39.00 |
| 02. | கோதுமை மா | '' | 19.00 | 19.65 | 20.00 | 20.30 | 19.50 | 20.00 | 22.65 | 22.00 |
| 03. | சீனி | '' | 45.00 | 45.30 | 46.00 | 57.65 | 47.00 | 48.00 | 47.30 | 49.00 |
| 04. | கத்தரி | '' | 15.50 | 21.30 | 16.30 | 22.00 | 14.30 | 18.60 | 20.65 | 19.00 |
| 05. | வெண்டி | '' | 20.65 | 31.65 | 18.00 | 16.30 | 16.00 | 40.00 | 22.00 | — |
| 06. | பாகல் | '' | 18.00 | 24.65 | 24.00 | 17.65 | 25.00 | 20.00 | 36.00 | 28.00 |
| 07. | புடோல் | '' | 15.00 | 19.30 | 14.30 | — | — | 20.90 | 19.50 | — |
| 08. | பயற்றங்காய் | '' | 20.00 | 22.00 | 16 30 | 30.00 | 19 30 | 25.00 | 22.30 | 18.00 |
| 09. | தக்காளி | '' | 25.00 | 28.65 | 24.65 | 19 00 | 30.00 | 32.50 | 33.30 | 28.00 |
| 10. | வாழைக்காய் | '' | 17.00 | 26.65 | 21.30 | 23.00 | 26.00 | 23.00 | — | 22.00 |
| 11. | பீற்றூட் | '' | 10.00 | 13.30 | 9.00 | 10.00 | 12.00 | 18.00 | 12.30 | 11.00 |
| 12. | தேங்காய் | ஒன்று | 27.65 | 36.00 | 29.50 | 33.00 | 29.00 | 26.50 | 23.30 | 24.50 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 16.20 | 23.00 | 15.00 | 26.65 | 13.65 | 20.00 | 20.65 | 20.65 |
| 14. | எலுமிச்சை | '' | 61.65 | 81.65 | 60.00 | 81.65 | 50.00 | 55.00 | 56.65 | 65.50 |
| 15. | வெங்காயம் | '' | 12.15 | 23.65 | 13.00 | 15.00 | 13.50 | 13.50 | 10.80 | 17.50 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | '' | 30.00 | 35.30 | 35.00 | 31.65 | 30.00 | 45.00 | 35.00 | — |
| 17. | இறால் | '' | 90.00 | 77.50 | 86.65 | 70 00 | 100.00 | — | 110.00 | 80.00 |
| 18. | பெரியமீன் | '' | 175.00 | 109.15 | 90.00 | 92.30 | 150 00 | 105.00 | 115.00 | — |
| 19. | சிறியமீன் | '' | — | 40.00 | 50.00 | 80.00 | 60.00 | 65.00 | 55.65 | — |
| 20. | முட்டை | ஒன்று | 7.50 | 8.30 | 7.40 | 8.00 | 8.00 | 9.00 | 8.65 | 7.25 |

தகவல்- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

## தெரிவு

சாவகச்சேரி பழனி ஆண்டவர் ஆலய பரிபாலன சபைக்கான இவ்வாண்டு நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் போஷகராக ஆத்மஜோதி நா. முத்தையா உள்ளார்.

## அலங்கார உற்சவம்

மீசாலை வடக்கு அருள்மிகு நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் நாளை வியாழன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

## மன்னாரில் தேடுதல்

நேற்று முன்தினம் காலை முதல் மன்னார்தீவில் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டதையடுத்து இராணுவமும் பொலீசாரும் கூட்டாக தேடுதல் நடத்தி வருவதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## கண்காட்சி

யாழ். மாவட்டத்தில் பொருளாதார மேம்பாட்டை மையமாகக் கொண்ட நூலக, ஓவிய, சிற்பக் கண்காட்சி எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் நடாத்தப்படவுள்ளது. யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் இக் கண்காட்சியை நடாத்த முடிவு செய்துள்ளது. (24)

ஈழநாதம்

# பம்பாய் குண்டு வெடிப்பிற்கு இந். உளவுதுறையேகாரணம்

### பாகிஸ்தான் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

இந்தியாவின் பம்பாய் நகரில் நடந்த தொடர் குண்டு வெடிப்பிற்கு இந்திய உளவுத் துறையினரே காரணம் எனப் பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி உள்ளது.

இந்திய உளவு நிறுவனம் மிகவும் நுட்பமாகத் திட்டமிட்டு இந்தக் குண்டுவெடிப்புக்களை நிகழ்த்தியுள்ளதாகவும் அது தெரிவித்தது.

இக் குண்டுவெடிப்புக்களுக்குப் பாகிஸ்தானே சூத்திரதாரி என இந்தியா குற்றஞ்சாட்டிவருவது தெரிந்ததே.

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல்ஒன்றுநாளை வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். [22]

# முதலமைச்சராக இருக்க ஜெயலலிதா தகுதியற்றவர்

(சென்னை)

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி ஆளுநரிடம் கொடுத்த மகஜரின் அடிப்படையில் முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவை உறுப்பினர் பதவி வகிப்பதற்கு தகுதியற்றவர் ஆகிறார் என்று தமிழக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்ததையடுத்து நேற்றும் தமிழக சட்டப்பேரவையில் கூச்சலும் குழப்பமும் நிலவியது. அடிதடி நிலைமைகள் காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்பு செய்தமையால் தவிர்க்கப்பட்டன.

இதேவேளை காங்கிரஸ் கட்சியின் வெளிநடப்பிற்குப் பின்னர் சபையில் பேசிய அவை முன்னவர் நெடுஞ்செழியன், தேர்தல்கமிஷன் சுப்பிரமணியம் சுவாமியின் மனு மீது எடுக்கும் எந்த நடவடிக்கையையும் சமாளிக்க தமிழக அரசு தயாராக இருப்பதாகவும், அரசியல் சாசன விதிகளின்படி தேவைப்பட்ட் நடவடிக்கைகளை முதல்வர் எடுப்பார் என்றும் குறிப்பிடடார்.

## தீ விபத்து

புதுக்கோட்டை மாவட்டம் செந்நெல் ஏந்தல் என்னும் கிராமத்தில் அண்மையில் ஏற்பட்ட பெரும் தீவிபத்தில் மீனவர்களுக்கு சொந்தமான இருநூறுக்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து சேதமாகியுள்ளன. இச் சம்பவம் நேரிட்டமைக்கான காரணம் பற்றி எதுவும் தெரியவரவில்லை.


தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

**வருடாந்த பொதுக்கூட்டம்**

இடம்: இனுவில் மத்திய கல்லூரி
காலம்: 17-04-93 சனிக்கிழமை

காலையில் ஒன்று கூடல், பின் மதியபோசனத்துடன் தொடர்ந்து பொதுக்கூட்டம் நடைபெறும்.

★ அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
(I) அங்கத்துவம் புதுப்பிக்க வேண்டியவர்கள்...
(II) மதியபோசனத்தில் பங்குகொள்ள விரும்புபவர்கள்...
(III) பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள்...

ஏப்பிரல் மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் (இனுவில்) பாடசாலை நேரத்தில் அல்லது விடுமுறை நாட்களில் காலை 9—12 மணிக்குள் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள்.

க. நாகராசா, தலைவர் (4595) சி. உருத்திரலிங்கம், இணைச்செயலாளர்



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

1993 வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கான

**அறிவித்தல்**

மேற்படி பொதுக் கூட்டம் 16-05-93 (ஞாயிற்றுக் கிழமை) முற்பகல் 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். கிளையின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 அங்கத்துவப் பிரதிநிதிகள் (இவர்களில் யாரும் வராதவிடத்து அவர்களுக்காக நியமிக்கப்படும் பிரதிநிதிகள்) மாத்திரமே இக்கூட்டத்தில் பங்குபற்றலாம். இவர்கள் 1993 க்கான அங்கத்துவப் பணத்தை செலுத்தியவர்களாக இருத்தல் வேண்டும். இப்பிரதிநிதிகள் பெயர்களைப் பிரிவுத் தலைவர் / செயலாளர் 01-05-93 க்கு முன்பாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

73, கண்டி வீதி, கௌரவ செயலாளர்


# கறுப்பு பூனை படுகொலை; பகிரங்க விவாதத்திற்கு வருக

## பிரேமாவிற்கு உடுகம்பொல சவால்

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின் போது கறுப்பு பூனைகளால் மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான படுகொலைகள் பற்றி பகிரங்க விவாதம் ஒன்றை நடாத்த முன்வரும்படி முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல அரசுக்கு சவால் விட்டுள்ளார்.

கடந்த வாரத்தில் கொழும்பில் உடுகம்பொலவின் கையெழுத்துடன் விநியோகிக்கப்பட்ட ஆறு பக்க கடிதம் ஒன்றில் அவர் மேலும் கூறுகையில், கடந்த பொதுத் தேர்தலின் போது பெருமளவானோர் படுகொலை செய்யப்பட்டதன் மூலம் ஆகக் குறைந்தது இரண்டு லட்சம் பேர் வாக்களிப்பிலிருந்து விலகிக் கொண்டதாகவும், இவ்வாறு வாக்களிப்பிலிருந்து விலகிக் கொண்டோரில் பெரும்பாலானோர் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் போது இடம்பெற்ற வன்செயல்கள் பற்றி தேர்தல் ஆணையாளர் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ள சில விடயங்களுக்கு உடுகம்பொல கண்கண்ட சாட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த நான்கு ஆண்டு கால அரசியல் போக்கு பற்றி அவர் கையில், அரசியலை குற்றம் செயல் மயமாக்கிய காலம் என்றும் மதத்தை அரசியல் மயப்படுத்திய காலம் என்றும் வர்ணித்துள்ளார்.

அத்துடன் காலஞ்சென்ற விஜயவீராவின் குடும்பத்தினரை ஐ. தே. க. விற்கு ஆதரவு தேடும் நோக்கில் பயன்படுத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1988 தேர்தலின் போது ஜே வி. பியினருக்கு அமைச்சரவையில் ஆறு இடங்கள் ஒதுக்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார். அரசியல் காரணங்களுக்காக கொலை செய்யப்பட்ட 1200 பேரின் பெயர்ப் பட்டியலை முன்னதாக வெளியிட்டிருக்கும் உடுகம்பொல 1988 தேர்தல்களின் போது கொல்லப்பட்டவர்கள் பற்றி பகிரங்க விவாதம் நடந்த அரசாங்கம் தயாராகுமானால் தான் தலைமறைவு வாழ்வை முடிக்கலாம் என்றும் கருத்து வெளியிட்டுள்ளார்.

# 30 மில்லியன் பணம் இலங்கை வங்கிக்கு வந்தது

யாழ். இலங்கை வங்கிக் கிளைகளுக்கு ''குமாரி'' கப்பலில் 30 மில்லியன் ரூபா பணம் எடுத்து வரப்பட்டுள்ளது.

எதிர்வரும் புத்தாண்டுத் தினத்தையடுத்து வங்கி வாடிக்கையாளர்களுக்குக் கைவிஷேசம் வழங்கும்வகையில் கூடுதலான நாணயங்கள் எடுத்து வரப்பட்டிருக்கின்றன.

அத்தோடு பத்து, இருபது ரூபா புதிய நோட்டுக்களும் வந்திருக்கின்றன. மேற்குறித்த பணம் வங்கி உத்தியோகஸ்தர்களால் எடுத்துச்செல்லப் பட்டது. (யோ

# தமிழக அரசைக் கலைக்க ஆளுனர் அனுமதிக்ககூடாது

## காங்கிரஸ் தலைவர் கோரிக்கை

தமிழ்நாடு சட்டமன்றத்தைக் கலைக்குமாறு அ. தி மு. க. பரிந்துரை செய்தால் அதனை ஏற்கவேண்டாம் என்றும் அ. தி. மு. க. உறுப்பினர்கள் அனைவரும் ராஜினாமா செய்யும் பட்சத்தில் அதனை அமைப்பது பற்றி ஆளுனர் பரிசீலனை செய்யலாம் என்றும் தாம் கூறியதாகத் தெரிவித்தார்.

ஜெயலலிதா மீதான ஊழல் புகார்மனு தேர்தல் கமிஷனின் பரிசீலனையில் இருக்கும் கரு


**நன்றி நவில்கின்றோம்**

எங்கள் அன்புச் செல்வம்

செல்வன் ஞா. வில்சன் நிக்கல

[மருத்துவபீட முதலாம் வருட மாணவ

அவர்களின் அகால மறைவை அறிந்து ... வேறுவழிகளில் ஆறுதலளித்த குருக்கள், ... போராளிகள், யாழ். பல்கலைக்கழகக் குடும்ப... யோர்கள், உறவினர்கள், நண்பர்கள், இறுதி ... தில் கலந்து கொண்டோர், குறிப்பாக இறுதி... முன்னின்று நடாத்திய யாழ். மருத்துவபீட மாண... அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தனித்தனியே நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

இல. 58, கோயில் வீதி, யாழ்ப்பாணம். — குடும்பத்



**5-ம் நாள் நினைவஞ்**

வீரப்பிறப்பு 01 | 04 | 1977 வீர ... 1



**வீரவேங்கை அருளப்ப**

[மொறிஸ் விஞ்சன் சிறிதாஸ்]

27-03-93 அன்று மணலாறு மாவட்டத் அமைந்துள்ள சிலோன் தியேட்டர் காவல் ... தகர்ப்பின் போது வீரச்சாவைத் தழுவிக்கொ...

பலாலி மண்ணிலே கருவாகி
மணலாறு மண்ணிலே காவியமாகி
பருத்தி மண்ணிலே அஞ்சலிக்காகி
நவிண்டில் மண்ணிலே சமாதியாகினாய்

இயற்கையிலே வீரம் படைத்த குடும்பத்தில் பிற
சிற

நாட்டின் அடிமை நிலைகண்டு துடித்தாய்
புலிகளின் படையினிலே சேர்ந்து தேர்ச்சி பெற்
புதிய புலிவீரனாய் அருளப்பா களம்நோக்கி நட

நீ கண்ட முதல் களம் தமிழீழ இதயமாம் மண
அங்கு உன் பிஞ்சுக்கரத்திலே கனரக ஆயுதம்
அது கனன்று முடிந்தபோது எதிரிக்கோ பல இ
உங்களுக்கோ R. C. L பின் உதைப்பற்ற பீரங்கி
உட்பட பல நவீன ஆயுதங்கள்

உன் தந்தை மொறிஸ் உனக்குமுன்னே வானத்தில்
உன் தாய் உன் வீரச்சாவு கேட்டு துயருற, உ
தரர், மருமக்கள் வீரச்சாவு கண்டு களம் தனில் உ
பெற, தமிழீழ மக்கள் மனங்களில் தமிழீழம் உறு
நீ உறுதியின் உறைவிடமாய்
சந்தனப் பேழையில் உறங்குகின்றாய் ஈழமதில்

31-03-93 இன்று எமது இல்லத்தில் நடை... மதிய போசனத்தில் உற்றார், உறவினர் ... போராளிகளையும் கலந்து கொள்ளுமாறு கே...கின்றோம்.

பலாலி வடக்கு, வசாவிளான். உன்பிரிவால் துடித்து துய... அம்மா, சகோதரர்க...

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
30-03-1993

கௌரவ செயலாளர்

(சி/6303)

## நன்றி கூறல்

அண்மையில் பருத்தித்துறை இறங்கு துறையில் ''மரினால்'' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும்பணியில் ஈடுபட்டபோது தற்செயலாக விபத்துக்குள்ளானேன். அப்போது முதலுதவி அளித்த இன்பருட்டி கடற்றொழில் சங்க அங்கத்தவர்களுக்கும், விரைவாக கப்பலில் இருந்து இறங்கு துறைக்கு கொண்டு வந்த வள்ள ஓட்டிகளுக்கும், இறங்குதுறைப் பொறுப்பாளர்களுக்கும், துரித கதியில் வைத்திய சாலைக்கு கொண்டு சென்று உடனடி வைத்திய சேவைகள் அனைத்தும் செய்த தமிழீழ வைத்தியர்களுக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும், வைத்திய சாலையி்ல் உடனிருந்து என்னை கவனித்த உறவினர்களுக்கும், மற்றும் வைத்தியசாலையிலும், வீட்டிலும் வந்து ஆறுதல்கூறி பார்வையிட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

இன்பருட்டி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

செ. பாலசிங்கம்
குடும்பத்தினர்

(4081)

## கொம்பக்ட் டிஸ்க்கில் புதிய பாடல்கள்

எஜமான், மகராசன், சின்னகண்ணம்மா, மணிக்குயில், கப்ரன் மகள், வோல்ட்ரர் வெற்றிவேல் மறுபடியும் THE BEST OF ILAIYARAAJA, எங்கவீட்டு வேலன்
இன்னும் பல புதிய திரைப்பட பாடல்கள்
COMPACT DISC கில் வந்துள்ளன.
மாஸ்ரர் பிரதி பதிவுசெய்ய விரும்பும் ஒலிப்பதிவு நிலையங்கள் தொடர்புகொள்ளுங்கள்:

**மோகன்**
**ஷண் றெக்கோடிங்ஸ்பொட்**
நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

(4079)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம், இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம்ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

அரசியல் போக்கு பற்றி அவர் தமது கடிதத்தில் குறிப்பிடு

### உதிரிப்

வத்தினர் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

இராணுவம் மட்டுமன்றி வெவ்வேறு அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களிலும் இத்தகைய மோசடிகள் இடம்பெறுவதாகவும் செய்திகள் தெரிவிககின்றன.

### மன்னார்த்

நடவடிக்கையின்போது மன்னார் தீவில் விடுதலைப்புலிகளால் கைவிடப்பட்ட மூகாம் ஒன்றை இராணுவத்தினர் கண்டுபிடித்தாக கூட்டுப் படைத் தலைமையக பேச்சாளர்ஒருவர் லங்காபுவத்திற்குத் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுமுன் தினம் காலை முதல் மன்னார் தீவில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது தெரிந்ததே.

### படை

வட்டாரங்கள் தெரிவிப்பதாக ரைம்ஸ் கூறுகிறது

புலிகள், படையினர் கவனத்தைத் திசைதிருப்பும் முயற்சியில் கிழக்கிலும் கொழும்பு நகரிலும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. இதன் கா்ரணமாகத் தான் சந்தேகத்துக்கிடமான முறையில் பொது இடங்களில் காணப்படும் பொதிகள் பற்றி கவனமாக இருக்கும்படி தொடர்புச் சாதனம் மூலம் பொதுமக்கள் எச்சரிக்கப்படுவதாகவும் வடக்கில் இருந்து வருபவர்களுக்குத் தங்குமிடம் வழங்கும் உணவு விடுதிகளையும் மற்றும் தங்கும் அறைகள் கொண்ட கட்டடங்களையும் கொழும்பிலும், புறநகர்ப் பகுதிகளிலும் பொலீஸார் அதிகமாக கண்காணித்து வருவதாகவும் சண்டே ரைம்ஸ் தெரிவிக்கிறது.

செய்யும் பட்சத்தில் அதனையும் ஏற்கவேண்டாம் என்றும் தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவரும், காங்கிரஸ் கட்சி உறுப்பினருமான எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் தமிழ்நாடு ஆளுனரைக் கேட்டுள்ளார்,

நேற்று காங்கிரஸ்சட்டசபை உறுப்பினர்களுடன் சென்று ஆளுனரைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கோரினார்.

அத்தகைய தொரு நிலை மாற்று அரசாங்கம் ஒன்றை

### போட்டி

யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் இல்ல மெய் வல்லுனர்போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது இப்போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கலந்து கொள்வார்.

போட்டிகள் சத்தியம், சுந்தரம். சிவம் இல்லங்களுக்கிடையில் நடைபெறும். (09)

பரிசீலனையில் இருக்கும் தருணத்தில் சட்ட சபையைக் கலைக்க அவர் முற்பட்டால் அது ஜனநாயக நெறிமுறைக்கு மாறானது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடிஇராமமூர்த்திகூறியிருப்பது குறிப்பிடத்தக்துக

### வெளிவாரிப்

மாணிபகுதி I ஆகியவற்றுக் கானவிண்ணப்பங்களேகோரப் படுகின்றன. இவற்றுக்கான பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் செப்ரெம்பர் காலப்பகுதியில் நடைபெறவுள்ளன.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை ஏப்பிரல் 2 முதல் பெற்றுக் கொள்ளலாம் எனவும் இவ் விண்ணப்பங்கள் யாவும் மே 15ற்கு முன் அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு இணைப்பாளர் கலாநிதி பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

திருமதி
**நடராசா (ஆனந்தி) நாகேஸ்வரி அம்மாள்**

மானிப்பாய் வடக்கு, பொன்னம்பலம் ஒழுங்கையை வசிப்பிடமாகக்கொண்டவரும் சங்கரப்பிள்ளை நடராசா (ஆனந்தி) [ஜெயமதி ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி] அவர்களின் அன்பு மனைவியும் ராதிக்கா, கீர்த்திக்கா (உடுவில் மகளிர் கல்லூரி), வகீஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவக்கொழுந்துவின் மகளுமாகிய நாகேஸ்வரி அம்மா (வவா) காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்றுமாலை 3.00 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக அன்னாரது இல்லத்தில் இருந்து மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சங்கரப்பிள்ளை நடராசா (ஆனந்தி)
பொன்னம்பலம் ஒழுங்கை,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

(4600)

வசாவிளான்.
தற்போதைய முகவரி;
பீச்றோட்,
2-ம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

அம்மா, சகோதரர்க
சகோதரிகள். உறவின
நண்பர்கள்.

(சி

## மரண அறிவித்தல்

கனகசூரியர் இளையதம்பி

துன்னாலை வடக்கு இந்திரனம்மன் கோயில
பிறப்பிடமாகக் கொண்ட கனகசூரியர் இளைய
காலமானார். இவர் காலஞ் சென்ற தெய்வான
அன்புக் கணவரும், காலஞ்சென்ற நவரத்தினம் (
முகாமையாளர் இலங்கை வங்கி யாழ்). காலஞ்
பாலசிங்கம், வன்னியசிங்கம், மகேஸ்வரி ஆகியே
அன்புத் தந்தையும், இந்திராணி சரஸ்வதி, சி
கியம், குமாரசாமி (இந்திரா என்ஜினியர்ஸ் ஓட்டு
ஆகியோரின் அன்பு மாமனாரும், வனஜா, வ
சதீஸ்குமார் கிரிஜா, சாந்திக்குமார் (மாவீரன்
ரவி) செல்வக்குமார், உதயகுமார் ஆகியோரின்
புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 30-0
(நேற்று) தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்
உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏ
கொள்ளவும்.

சாந்திக்குமார் வீதி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

தகவல்:
குமாரசாமி (மருமக

[45

## உள்வந்த வெளிச்சென்
## வாகன இலக்கங்கள்
## 30-03-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8812

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

24-3906, 24-5461, 26-3412, 43-3576, 27-41
27-1375, 26-2786, 27-3903, 26-2510, 42-1
27-5662, 40-2249, 42-2323. 28-9633, 26-0
40-2829, 26-3250, 42-0526, 27-2088, 28-1
26-9658, 27-7740, 27-2020, 26-4510, 27-54
26-8746.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-6996, 22-6897, 26-1321, 26-4139, 27-90
24-0878, 24-7623, 42-0920, 24-5623, 27-11
28-4672, 22-9257, 26-0535, 22-3591, 28-094